# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● நவம்பர் 20, 2021

Weekly E-paper ● November 20, 2021




## வென்றன மீண்டும் வீரமும் தியாகமும்!

சுப.வீரபாண்டியன்

### துணைவேந்தர் நியமனம் மாநில அரசின் உரிமை!

பேராசிரியர் மு. நாகநாதன்

### ஆளுநரும் சட்டத்திற்கு உட்பட்டவரே !

தலையங்கம்

### தொடரும் பாலியல் வன்முறைகள் - யார் குற்றம்?

இர.ஜனனி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● நவம்பர் 20, 2021 Weekly E-paper ● November 20, 2021


# வென்றன மீண்டும் வீரமும் தியாகமும்!

**சுப.வீரபாண்டியன்**

உறுதியான, தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாய், அடாவடி அரசும் இப்போது அடிபணிந்துள்ளது! வென்றுள்ளன மீண்டும் வீரமும், தியாகமும்!

விவசாயிகளின் வீரம் செறிந்த போராட்டம், ஓராண்டாக இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்ததொரு வரலாற்று நிகழ்வு! கொட்டும் மழையில், குளிரும் பனியில் வீடு திரும்பாமல் வீதியில் கூடி நின்ற உழவர்கள் இறுதியாய் வெற்றி பெற்றுள்ளனர். அடியும் உதையும் வாங்கி, அத்தனை உயிர்களைப் பலிகொடுத்து, அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல், ஆசை வார்த்தைகளுக்கு மயங்காமல் அவர்கள் காட்டிய போராட்ட உறுதி, இன்று அவர்களின் தோள்களுக்கு வெற்றி மாலையைக் கொண்டு வந்துள்ளது.

ஓராண்டு காலமாகப் பிடிவாதம் செய்துவந்த ஒன்றிய அரசு, நேற்று திடீரென்று, விவசாய உற்பத்தி ஊக்குவிப்புச் சட்டம், விவசாயச் சந்தைத் திருத்தச் சட்டம், இன்றியமையாத பொருள்கள் திருத்தச் சட்டம் ஆகிய மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டது.



இச்சட்டங்களின் நன்மைகளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் விவியசாயிகள் புரிந்து கொள்ளாததால் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளன என்கிறார் பிரதமர் மோடி. ஒரு சட்டத்தின் நன்மையை ஓராண்டிற்குப் புரிய வைக்க முடியாத அரசா இது!

பாஜக அரசு பதவியேற்ற நாளிலிருந்தே விவசாயிகளின் பொருளாதார நிலை எவ்வளவு தாழ்ந்துகொண்டே போயிருக்கிறது என்பதை ஒரு புள்ளி விவரம் எடுத்துக் காட்டுகிறது. 2014ஆம் ஆண்டு ஒரு விவசாயக் குடும்பத்தின் சராசரிக் கடன் 17,000 ரூபாயாக இருந்தது. பாஜகவின் 5 ஆண்டு கால ஆட்சிக்குப் பிறகு அது 1,20,000 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இம்மூன்று வேளாண் சட்டங்களும் நடைமுறைக்கு வந்திருக்குமானால், விவசாயக் குடும்பங்கள் அழிந்தே போயிருக்கும்.

இந்தியாவில் 718 மாவட்டங்களிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகளையும், பெரு நிறுவனங்களின் அங்கங்களாக இணைத்து விடுவதே விலக்கிக் கொள்ளப்பட்ட சட்டங்களின் சாரம். அதன் விளைவு, அதானிகளுக்கு இன்னும் ஆயிரம், லட்சம் கோடிகள் வருமானம் கூடியிருக்கும்.

சட்டங்களின் நன்மைகளைப் புரிந்து கொள்ளாததால் இல்லை, வரக்கூடிய விளைவுகளைச் சரியாகப் புரிந்து கொண்டதால்தான் விவசாயிகள் ஓராண்டு இடைவிடாமல் போராடினார்கள்.

இந்த விவசாயிகள் போராட்டத்தைத் தமிழ்நாட்டில் திமுகவும், அதன் தோழமைக் கட்சிகளும் தொடர்ந்து ஆதரித்தன. நாடாளுமன்றத்திலும் குரல் கொடுத்தன. சில ஆதரவுப் போராட்டங்களையும் நடத்தின. ஆட்சிக்கு வந்தபிறகு, வேளாண் சட்டங்களை விலக்கிக் கொள்ளச் சொல்லித் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.


இதற்கு நேர் எதிராக, முந்தைய அதிமுக அரசு இச்சட்டங்களை ஆதரித்தது. நாடாளுமன்றத்திலும் பாஜக அரசுக்கு ஆதரவாக நடந்து கொண்டது. சுருக்கமாகச் சொன்னால், இந்த வேளாண் சட்டங்களைக் கொண்டுவந்ததில் பாஜகவுக்கு எவ்வளவு பங்கு உண்டோ, அதே அளவு பங்கு அதிமுகவிற்கும் உண்டு!

சட்டங்களைத் திடீரென்று விலக்கிக் கொண்டதில் ஒன்றிய அரசுக்குச் சில உள்நோக்கங்கள் உண்டு என்பது அனைவரும் அறிந்த உண்மை! ஒன்றிய அரசு அறிந்து கொள்ள வேண்டிய உண்மை ஒன்றும் உள்ளது - ஒரு நாள் முடிவு, ஓராண்டு வலியை மறக்கடிக்கச் செய்து விடாது!

●

# துணைவேந்தர் நியமனம் மாநில அரசின் உரிமை!

**பேராசிரியர் மு. நாகநாதன்** மாநிலத் திட்டக் குழு முன்னாள் துணைத்தலைவர்



ஆர்.என்.ரவி - அமித்ஷா

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போது கல்வி என்பது மாநிலப் பட்டியலில்தான் இருந்தது. நேரு காலத்தில் கல்விக்கான ஏ.என். முதலியார் குழு அமைக்கப்பட்டது. அதன்பின் லால்பகதூர் சாஸ்திரி காலத்தில் கோத்தாரி குழு அமைக்கப்பட்டது. கோத்தாரி குழு உலகின் பல்வேறு தலை சிறந்த பல்கலைக்கழகங்கள், கல்வியாளர்களின் கருத்துகளைக் கேட்டுத்தான் அறிக்கையைக் கொடுத்தது. கோத்தாரி கமிஷனின் முதன்மையான பரிந்துரை, கல்வி மொழியோடும் பண்பாடோடும் தொடர்புடையது என்பதால் கல்வியை எக்காரணத்தைக் கொண்டும் மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றக்கூடாது என்பதாகும். ஆனால் நெருக்கடி நிலை நடைமுறைப்படுத்தப்பட்ட போது டெல்லியில் உள்ள உயர் ஜாதி அதிகாரிகளால் கல்வி மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது.

தமிழ்நாட்டின் கல்விக் கட்டுமானம் என்பது, நீதிக்கட்சி ஆட்சிக் காலம் தொட்டு, கல்வி வள்ளல் காமராஜர், நெ.து. சுந்தரவடிவேலு ஆகியோரைத் தொடர்ந்து அண்ணா, கலைஞர் போன்றோர் பார்த்து பார்த்து உருவாக்கியது. அதிகப் பல்கலைக்கழகங்களை கலைஞர் உருவாக்கினார். அதன்பின் எம்ஜிஆர் ஆட்சிக் காலத்திலும் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன. இவையெல்லாம் மாநிலப் பல்கலைக்கழகங்கள். கல்வி நெறிக் காவலராக இருந்த நெ.து.சுந்தரவடிவேலு அவர்களை, கலைஞர் சென்னைப் பல்கலைக்கழ்கத் துணைவேந்தர் ஆக்கினார்.



பேராசிரியர் மு. நாகநாதன்

துணைவேந்தர் தகுதியை அன்று முதலமைச்சர்தான் முடிவு செய்தார். அய்யா நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் கல்வித் துறையில் அனுபவம் கொண்டவரே தவிர பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தவர் இல்லை. இன்று மத்திய அரசின் யுஜிசி என்ற பெயரில் துணைவேந்தர்கள் தகுதியை நிர்ணயிப்பது, மாநில அரசின் உரிமைகளில் கை வைப்பதாகும். இன்று கல்லூரிகளில் முதல்வர்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் கூட அவர்கள்தான் கட்டளை இடுகிறார்கள். ஆனால் அவர்கள் பள்ளிக்கல்விக்காகவும், உயர் கல்விக்காகவும் கொடுக்கிற நிதிஉதவி எவ்வளவு?

2019-2020 புள்ளி விவரப்படி நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியில் ஒரு விழுக்காடு கூட கொடுக்கவில்லை. அந்த ஒரு விழுக்காட்டிலும் கூட மத்தியப் பல்கலைக்கழகங்களுக்கு 90 சதவீதம் செலவு செய்து விடுகிறார்கள். ஆனால் பொருளாதார ஆய்வறிக்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3% கொடுக்கப்படுகிறது என்று மத்திய அரசு போட்டுக் கொள்கிறது. மாநில அரசு செய்யும் செலவையும் சேர்த்து அவர்கள் போட்டுக் கொள்கிறார்கள்.

யுஜிசி என்ற பெயரில் பல்கலைக்கழகங்களின் ஆய்வுப் படிப்புக்கான உதவித்தொகை வழங்கும் உரிமையைத் துணைவேந்தரிடம் இருந்து பறித்தார்கள்.




பாலகுருசாமி

இப்படி மாநிலப் பல்கலைக்கழகங்களின் அதிகாரங்களை ஒவ்வொன்றாக பறித்தவர்கள் இப்போது துணைவேந்தரையே பறிக்கிறார்கள்.

இந்த நான்கு ஆண்டுகளில் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அதிமுக ஆட்சியில் துணைவேந்தரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை ஆளுநரிடம் விட்டுவிட்டார்கள். கலைஞர் ஆட்சியில் இருந்தபோது கலைஞர் சொல்பவர்தான் துணைவேந்தராக இருந்தார். ஜெயலலிதா ஆட்சியின் போதும் கூட அப்படித்தான் இருந்தது. முதலமைச்சரே பல்கலைக்கழகங்களுக்கு வேந்தராக முடியும் என்று ஒரு சட்டத்தைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மாநிலத்தின் உரிமையை, எடப்பாடி பழனிச்சாமி கூட்டத்தார், திராவிட இயக்கத்திற்கு விரோதமாக, துணைவேந்தர் பதவியை ஆளுநருக்கு விட்டுக் கொடுத்து விட்டார்கள். அதன் விளைவு என்ன?

திருவள்ளுவர் பல்கலைகழகத்திற்கு ஒருவரைத் துணை வேந்தராக நியமித்தார்கள். அவர் பாஜகவின் கையாளாகச் செயல்பட்டார். அங்கு பூஜை எல்லாம் செய்ய வேண்டும் என்று சொன்னார். அதேபோல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் கஸ்தூரி, பெண்களை வைத்துப் பூஜை நடத்த முயற்சி செய்தார். அதை நான் வெளிப்படையாக முகநூலில் பகிர்ந்தபின் ஆசிரியர் வீரமணி அவர்கள் அதனைக் கையில் எடுத்து, பின்னர் கல்வித்துறை அதை நிறுத்தியது. பெரியார் பல்கலைக்கழகத்திலும் இதேபோல் நடந்தது. அப்போதும் ஆசிரியர் அவர்கள் அதில் தலையிட்டு, பின்னர் தடுத்து நிறுத்தப்பட்டது. இவர்கள் துணைவேந்தராக நியமிப்பவர்களெல்லாம் பாஜகவின் கையாளாக இருப்பவர்களைத்தான். தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்படவில்லை. பாஜகவின் எடுபிடிகள்தான் துணைவேந்தர்களாக இந்த நான்கு ஆண்டுகளாக ஆளுநரால் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆளுநருக்கு அதற்கு அதிகாரம் கிடையாது. நமது அரசியல் சட்டப்படி பார்த்தால், கேபினட் மூன்று பேர் கொண்ட ஒரு குழுவை

தொடர்ச்சி 4ஆம் பக்கம்




## கருஞ்சட்டைப் பதிப்பகம்

இணையத்தள விற்பனை (online sales)

**கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமாகவோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

இணையதள முகவரி:
**karunchattaibooks.com**

தொடர்புக்கு
120 என்.டி.ராமாராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஆளுநரும் சட்டத்திற்கு உட்பட்டவரே !

“ஒரே நாடு, ஒரே சட்டசபை அமைய வேண்டும்” என்று, இமாச்சலப் பிரதேசத் தலைநகர் சிம்லாவில் நடைபெற்ற 82ஆம் சட்டப்பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் மோடி பேசியிருக்கிறார்.

அவர் பேசிய பின்னர் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள், நம் நாட்டில் சில அரசுகள் சட்டசபைகளைத் தபால் பெட்டிகளாகப் பயன்படுத்துகின்றன. சட்ட மசோதாக்கள் மீது விவாதம் நடத்தவோ அல்லது கேள்வி கேட்கவோ அனுமதிக்காமல், மசோதாக்களை விரைவாக நிறைவேற்றுகின்றன. சில அரசுகள் சட்டசபையை “ரப்பர் ஸ்டாம்பு”களாகப் பயன்படுத்துகின்றன என்று பேசியிருப்பதில் பொருள் பொதிந்து இருக்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பெரும்பான்மைச் சட்டமன்ற உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களில் முக்கியமானவைகளை, ஆளுநர் கிடப்பில் போட்டு விடுகிறார். அது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற வேண்டியவை என்றாலும், ஆளுநர்கள் அதைப் பல மாதங்களுக்குக் குடியரசுத் தலைவரிடம் எடுத்துச் செல்வதில்லை.

இப்படி இருக்கும் நிலையில் எந்தெந்த மசோதாக்களுக்கு, எந்தெந்தக் காலகட்டத்திற்குள் ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும், அல்லது திருப்பி அனுப்ப வேண்டும் என்பதற்கான காலக்கெடுவை வரையறை செய்ய வேண்டும் என்றும் அவர் பேசியிருக்கிறார்.

ஆளுநர் என்பவர் நடுவண் அரசின் ‘ஏஜண்ட்’ஆக இருக்கிறார். அவரை மாநில அரசுடன் கலந்து ஆலோசித்து நியமிக்க வேண்டும். அந்த நடைமுறை இன்று இல்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு இருக்கும் போது அங்கு ஆளுநர் தேவையில்லை. இதைத் தான் அறிஞர் அண்ணா “ஆட்டுக்கு எதற்குத் தாடி; நாட்டுக்கு எதற்கு ஆளுநர்” என்று சொல்லிருக்கிறார்.

இருந்தாலும் இன்று ஆளுநர் நடுவண் அரசால் நியமிக்கப்படுகிறார். அவரும் சட்டத்திற்கு உட்பட்டவர்தான். எனவே அவரின் அதிகார எல்லைகளை வரையறை செய்வது மிகவும் அவசியமானது என்ற கருத்தை சபாநாயகர்கள் மாநாட்டில் ஓங்கி ஒலித்திருக்கிறார் நம் பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள்.

ஒரே நாடு, ஒரே சட்டசபை என்ற ஆர்.எஸ்.எஸ். ஊதுகுரலுக்கு, மாநில சுயாட்சியை, அதன் தேவையை தெளிவாகவும், துணிச்சலாகவும் சொல்லியிருக்கும் அப்பாவு அவர்களின் திராவிடக் குரலை வாழ்த்தி வரவேற்போம்.

ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**
**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**
மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**
டுவிட்டர்: **suba_vee**
தொடர்புக்கு
**120 என்.டி. ராமாராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408**

# தொடரும் பாலியல் வன்முறைகள் - யார் குற்றம்?

**இர.ஜனனி**



கோவையைச் சேர்ந்த 17 வயது மாணவி, தன்னுடைய ஆசிரியர் பாலியல் தொல்லை கொடுத்த காரணத்தால், மன உளைச்சலுக்கு ஆளாகி நவம்பர் 20ஆம் தேதி தற்கொலை செய்து கொண்டார். தற்கொலைக்கு முன்பு "யாரையும் சும்மா விடக்கூடாது" என்று மூன்று நபர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்.

பள்ளித் தலைமை ஆசிரியரிடம் மாணவி புகார் கொடுத்தபோது "பஸ்ல போறப்ப இந்த மாதிரி நடக்கும் இல்ல அப்படி நினைச்சுக்கோ, வீட்ல சொல்லாதே" என்று கூறி கவுன்சிலிங் அனுப்பி இருக்கிறார்கள். தனக்கு நேர்ந்த தொடர் பாலியல் தொல்லை பற்றி பலமுறை சொல்லியும் எந்த நடவடிக்கையும் எடுக்காத பள்ளி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். மாணவியின் குரலுக்குச் செவி கொடுத்திருந்தால் மாணவியின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும். கல்வி வியாபாரத்தில் இலாபம் குறைந்து விடக் கூடாது என்பதற்காக, குற்றவாளிகளைப் பள்ளிகள் காப்பாற்றுகின்றன. ஆனால் இங்கு, உலகம் அறியாத நிரபராதிகளான மாணவச் செல்வங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

இங்கு குற்றவாளிகள் பள்ளி நிர்வாகமும், தனிப்பட்ட ஒரு ஆசிரியரும்தானா? பெண்ணை ஒரு போகப் பொருளாக காட்சிப்படுத்தும் மதங்கள் குற்றவாளிகள் இல்லையா? அவளுடைய நம்பிக்கை குடும்பத்தின் மீதும் கூட ஏன் இருப்பதில்லை? ஒரு பெண் தன்னுடைய பிரச்சனையை முறையிடப் புகலிடமே இங்கு ஏன் இல்லை?

வயது வரம்பு இல்லாமல் தினந்தோறும் பல பெண்கள் பாலியல் தொல்லைக்கு ஆளாகின்றனர். இதில் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களால் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாகுதலும் அடங்கும். இங்கு வீட்டில் சொன்னாலும் அதைக் கண்டு கொள்ளாமலும் அல்லது மேற்சொன்ன தலைமையாசிரியரின் பதிலையே கூறும் பெற்றோர்களும் இந்தச் சமூகத்தில் உண்டு.

பெண்களின் கற்பிலேயே மானம், மரியாதை, கவுரவம் இன்னும் எல்லாம் அடங்கியிருக்கின்றன என்று வெளியே பிம்பத்தை உருவாக்கிக் கொண்டுதான் இந்தச் சமூகத்தில் இத்தனைப் பேரும் பெண்களுக்கு எதிரானப் பாலியல் வன்முறைகளுக்குக் கள்ளத்தனமாகத் துணை போகின்றனர். இதுவே அந்தப் பெண், தான் விரும்பியவர்களுடன் உறவு வைத்துக்கொண்டால் அப்போது, குடும்ப மானமே போய்விட்டதாக அந்தப் பெண்ணைக் கொலை செய்கிற அளவுக்கு இந்தச் சமூகம் துணிகிறது.

*"Home, the most dangerous place for women, with majority of female homicide victims worldwide killed by partners or family"* வீடுகளே பெண்களுக்கு ஆபத்தான இடம் என்ற ஆய்வு முடிவை அய்.நாவின் ஒரு கிளை அமைப்பு *(United Nations Office on Drugs and Crime)* வெளியிட்டது.

பெருமதங்களின் ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்பைத் தகர்க்காமல், பெண்களின் இந்தப் பிரச்சனைகளுக்கு எப்படித் தீர்வு காண முடியும்? இதில் பெண்கள் விடுதலை மட்டுமன்று ஆண்களும் விடுதலையும் உள்ளடங்கியிருக்கிறது.

தந்தை பெரியார் சொன்னதைப்போல ஆண்-பெண் இருவருக்கும் உண்மை இன்பத்திற்கும் சுதந்திர வாழ்க்கைக்கும் இடம் ஏற்படும் சமூகத்திலேயே பெண்கள் இது மாதிரியான பாலியல் தொந்தரவுகளில் இருந்து விடுபடுவர். ●

---

2ஆம் பக்கத் தொடர்ச்சி...

நியமித்து, அந்தக் குழுவின் பரிந்துரைக்கு ஒப்புதல் கொடுத்தால், அதற்கு ஆளுநர் கையொப்பம் இட வேண்டும்.

இப்போது என்ன செய்திருக்கிறார்கள் பாலகுருசாமியை அதுபோன்ற ஒரு குழுவிற்குத் தலைமையாகப் போட்டிருக்கிறார்கள். அவர் வெளிப்படையாக புதிய கல்விக் கொள்கையை ஆதரிப்பவர். தமிழ்நாடு அரசு அதை ஏற்க வேண்டும் என்று சொல்பவர். இவரிடம் எதற்காக ஆளுநர், பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்?

தமிழ்நாட்டின் பல பல்கலைக்கழகங்கள் நிதி பற்றாக்குறையால் பெரும் சோதனைக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அதை நிவர்த்தி செய்வதற்கு ஒன்றிய அரசு இதுவரை எந்த முயற்சியும் செய்யவில்லை. அதிகாரத்தைப் பயன்படுத்தித் தங்களுடைய இந்துத்துவக் கொள்கைகளை உள்ளே புகுத்துவதற்கு நடத்தப்படுகிற ஒரு கேவலமான சதியாகவே இது இருக்கிறது.

இப்போதுகூட முதலமைச்சர் அவர்கள் கேபினட் மூலம் ஒரு குழு அமைத்து, இவரைத்தான் துணைவேந்தராக நியமிக்க வேண்டும் என்று சொன்னால், ஆளுநர் அவரைத்தான் நியமிக்க வேண்டும். இதை அரசிடம் கொண்டு செல்ல வேண்டும். ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு முதலமைச்சராக இருந்தபோது அவர் கேபினப் மூலம் பரிந்துரை செய்வார், ஆளுநர் கையொப்பம் இடுவார். கேபினட் ஒப்புதல் அளிக்கும் முடிவுகளை ஆளுநர் மறுக்க முடியாது.

மாநிலப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் நியமனத்தை மாநிலங்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று ஆளுநராக இருந்த பி.சி.அலெக்சாண்டர் அவர்களே சொல்லியிருக்கிறார். மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு மாநில அரசுதான் துணைவேந்தர்களை முடிவு செய்ய வேண்டுமேயொழிய, ஆளுநர் முடிவெடுப்பது சட்டவிரோதம். இப்போது இருக்கிற அதிகாரத்திற்கு உட்பட்டு கூட அது விரோதமான செயலாகும். மாநிலப் பல்கலைக்கழகங்களுக்குக் கொடுக்க வேண்டிய நிதியைத் தராமல் தங்களுக்கு வேண்டியவர்களைத் துணைவேந்தராக ஆளுநர் மூலம் நியமிப்பது அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயல். கூட்டாட்சிக்கு விரோதமான செயல். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian